


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



பூநகரி கறுக்காய்த்தீவினைப் பிறப்பிடமாக கொண்ட
யாழ் பல்கலைக்கழக மாணவன்

# அமரர் திரு. யோகராசா கோவிதன்

அவர்களின்
ஞாபகார்த்தமாக வெளியிடப்படும்

# கோவிதழ்

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் கற்பனை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கிறேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"
(திருவாசகம்)

03-08-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பு மகனாய் குலக் கொழுந்தாய்
சகோதரருக்காய் உதித்திட்ட மாணிக்கமாய்
தந்தைக்கு உபதேசம் செய்த தீர்க்கதரிசியாகி
அன்னையின் அன்பில் தோய்தவனாய்
அன்பும், பண்பும், துணிவும் கொண்டவனாய்
கற்றோரும், மற்றோரும் - உற்றோரும்
போற்றும் உத்தமனாய்
நண்பர்க்கும் நண்பனாய்
கந்தனை தோளில் சுமந்தவனாய்
கற்றலின் வெகுமதியை அறிந்தவனாய்
வலிய தேற்றம் கொண்ட ஆனந்த சொருபியாய்
கை தவறும் வேளையில் கூட
தந்தையை கட்டியணைத்து உச்சிமோந்தவனாய்
வீறு கொண்ட கோவிதனின் திருப்பாதங்களில்
கோவிதனை காணிக்கை செய்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

தாய் மடியில்
1991 . 08 . 24

இறையடியில்
2012 . 07 . 04

# செல்வன் யோகராசா கோவிதன்

(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)

அவர்களின்

## திதி நிருணய வெண்பா

"நந்தனத்தில் நன்மைதரு நாள் ஆனிப் பூரணை மறுநாள்
சிந்தையில் நினைத்த தெல்லாம் சித்தி பெற்று– கோவிதன்
தந்தையும் வேண்டாம், தாயும் வேண்டாம் என்று
சிந்தையில் சேர்ந்தான் சிவனடி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் வணக்கம் – துதி

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## *தேவாரம்*

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன் அருவிருத்தன் மழலைப் முழுவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயனமாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பமன்றே

## திருவிசைப்பா

நீறணிப் பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி யெம் கொடி யெம் ஈசனே உன்னைத்
தெண்டனே இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பால்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிற்கு மந்தணர்வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஞானத்தின் திரு வுருவை நான் மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்குங்
கானத்தினெழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

## திருப்புகழ்

தனன தான தத்த தனதனா
தனன தான தத்த தனதான
எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தானினைப்பை யிரு போதும்
இதய வாரித் திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர்காம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
வழுதி கூன்நிமிர்த்த பெருமாளே

"தென்னாடுடைய சிவனே போற்றி !
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"



இன்பமே சூழ்க!
எல்லோரும் வாழ்க!

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிதனின்

# வாழ்க்கைச் சுவடுகள்.....



அணிதுகில் திரை என நிரை நிரை ஒளிர
ஆழியின் மத்தியில் எழுந்திடு திலகமென
இந்து மா சமுத்திரத்தின் இந்து பிறையென
ஈந்திடு செல்வம் ஈறிலாது நல்கி
உடைமைகள் அனைத்தும் உள்ளகத்து அடக்கி
ஊறுகள் அனைத்தும் நீடுபட நீக்கியும்
எழிலொடு விளங்கிப் பொழில் தரு மணமாய்
ஏலம் கராம்பு கறுவா ஏர் தரு நெல்லு
ஐயமின்றித் தந்திடும் லங்கா நங்கையின்
ஒரு தலை நகரென ஒளி தரும் யாழில்
ஓர் புயமென விளங்கிடும் புதுமையும் தந்து
ஓங்கிடும் வளமெல்லாம் தன்னிடத் தடக்கயும்
தெய்வ ஆலயங்கள், சைவ ஆசாரங்கள்,
தான தருமங்கள் தன்னகம் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீந்தமிழ் வீசும், திறல் உடை வீரம்
கமம் செய் வேளாளர் கலை பயில் சான்றோர்
சித்த வைத்தியம் சீர் பெறு சைவமும்
காலத்தால் முந்திய பண்டைய பூநகரி
கிடைத்த தன் வளமும் முயற்சியின் பலனும்
கீர்த்தியும் பெற்று குறைவற விளங்கவும்
குமரன் சிவகுரு நல்லருள் துலங்கவும்
கூடும் மக்கள் வாழ் கறுக்காய்த்தீவே!

பழம் பெருமை வாய்ந்த பூநகர் கறுக்காய்த்தீவை வசிப்பிடமாகக் கொண்ட கமம் செய் சைவ வேளாள குலத்தை சேர்ந்த குமாரசாமி சதா சிவம் மகன் யோகராசாவிற்கும், தமோதரம்பிள்ளை நல்லையா மகள் மகிமலட்சுமிக்கும் திருவருள் துணையால் மணக்கோலம் 1981ம் ஆண்டு நடைபெற்றது. இவர்கள் இல்லறம் எனும் நல்லறத்தை பேணி இன்ப சுகத்தில் திளைத்து மூன்று இரத்தினக்கட்டிகாளன அருள்வேந்தன், யேந்திரன், கோவிதன் ஆகிய மும் மூர்த்திகளையும், ஓர் பவளக்கட்டியான சங்கீதாவினையும் பெற்று மகிழ்ந்தார். பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்த்து கற்பித்து குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்தனர். மூத்த புதல்வன் அருள்வேந்தன் மாவட்ட செயலர் உத்தியோகத்தர், இரண்டாவது புதல்வன் யேந்திரன் மாவட்ட செயலர் உத்தியோகத்தர், புதல்வி சங்கீதா கிளி/பூநகரி மகா வித்தியாலய ஆசிரியர்.

இந்த கோவிதழின் கதாநாயகச் செம்மல் கோவிதன்

1991/08/24ம் திகதி கல்வெட்டுத்திடல் முருகன் அருளைப் பெற்று ராஜா ராசாத்திக்கு கடைக் குட்டியாக அவதரித்தார். குழந்தை கோவிதனை நாற்பத்தோரம் நாள் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடாற்றிய வேளைதனில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இடம் பெயர்ந்து செக்காலை எனும் கிராமத்தில் (1991-2001) வரை அவரது வாழ்வு தொடரலாயிற்று முன்பள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பை சிறப்பாக முடித்துக் கொண்ட கோவி ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வியினை கிளி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தில் கற்றார். இக்கால கட்டத்தில் பெற்ற சாதனைகள் வரிசையில்

1. வகுப்பில் முதல் நிலைப்பிள்ளையாக திகழ்ந்தான்
2. தரம் 9ல் மாணவ தலைவனாக தெரிவு செய்யப்பட்டான்.
3. விளையாட்டில் வெற்றி வீரராக திகழ்ந்து மாவட்ட நிலையில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டான்.
4. கணித விஞ்ஞானப் போட்டியில் மாவட்ட நிலையில் முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்டான்.
5. க.பொ.த சாதரண தரப் பரிட்சையில் விசேட சித்திகள், திறமைச் சித்தியினையும் பெற்றுக் கொண்டான்.

கைலாய மலையைக் காணும் அப்பரைப்போல க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவின் கரையைக்காணும் கோவிதனானான். பல்வேறு வழிகளுடாகச் சென்றான். அப்பாதையைப் பொறித்துக் கொண்டால் எல்லாமே கரடு முரடான பாதை தான் இப்பிரிவைத் தொடர்வதற்காக கிளி/ மத்திய கல்லூரியில் இரண்டு மூன்று மாதங்கள் கற்றுக்கொண்டிருந்தபோது நாட்டில் கடுமையான குழப்ப நிலை ஏற்பட்டது. கற்றலும் தடைப்பட்டது, இவ்வாறிருந்த வேளையில் தந்தை தாய் மூன்று புத்திரர்களையும் காப்பாற்ற 2009/01/09 கால்நடையாக தரையிலும் தண்ணீரிலும் எல்லாம் இழந்த நிலையில் அழியாச் சொத்தின் ஆவணமான பனுவல்களை மட்டுமே கோவிதன் தலையில் சுமந்து சென்றான். பின்பு அனைவரும் வவுனியா நெடுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்க விடப்பட்டனர். கோவி கற்க ஆரம்பித்தான் சிறப்பான குரு இல்லை "குரு இல்லா வித்தை பாழ்" என்று சிறிய தமையன் கூறும் வார்த்தையைக் கேட்டு ஒரு சில விநாடிகள் சிந்திக்கலானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெற்றி நிட்சயம்

வேத தத்துவம்

கொள்கை வெல்வதே

யான் கொண்ட லட்சியம்" எனும் அமுத வாக்கிற்கிணங்க கற்பதற்காக தந்தைக்கு உபதேசம் செய்தான். உறவிணைப்பு மூலம் கதிர்காம நலன்புரி நிலையத்திற்கு சென்று படிப்பைத் தொடர்ந்தான். அங்கும் சிறப்பாக கற்க ஆசிரியர்கள் போதாமையால் தத்தளித்தான். கடலில் முழ்கிய மழலையைக் காப்பாற்றிய படகோட்டி போல் வித்தியாலயத்தில் நடை பெற்ற விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்தாரே வலயக் கல்விப் பணிப்பாளர் A.R.A ஒஸ்வேட் அம்மா அச்சந்தர்ப்பத்தில் தந்தையும் மகனும் ஓடிச் சென்று கற்றலின் துடிப்பை வெளிப்படுத்தினர். உடனடியாக கோவிதனின் குடுப்பத்தை வெளியில் எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வவுனியா நகரத்திற்கு அழைத்து சென்றார்.

வலயக்கல்விப் பணிப்பாளர் ஆசி

"எனக்கு செய்ய வேண்டிய பிரதி உபகாரம்

வேறொன்றும் அல்ல பிள்ளையே பெறுபேறு வரும் வரை காத்திருந்து காதோரம் மெல்ல வந்து செல்லிடுவாய்"

இவ்வாறு அதிஸ்டம் கைகூடிய வேளையில் யாழ்ப்பாணம் சென்யோன்ஸ் கல்லூரியில் அனுமதிப்பத்திரம் எடுக்கப்பட்டதுடன் அக்கல்லூரியின் அதிபர் திரு ஞான பொன்ராஜா அவர்களின் மான்பு மிகு செயற்பாட்டினால் கோவிதனை A9 பாதை ஊடாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிறப்பாக இரண்டு மாதங்கள் கற்றான். பின்பு சயன்ஸ் கோலிலும் கற்றான் பரீட்சைக்காலமும் நெருங்கியது (A/L) கற்றகாலமோ ஆறு மாதம் தான்) A/L பரீட்சையினை அண்ணாவின் அலுவலகத்தில் தங்கி நின்று கிளி/மத்திய கல்லூரியில் எழுதினான். கோவிதன் திட்டம் தீட்டி எண்ணிய பெறு பேறு A,C,S நினைத்தது கிடைக்கவில்லை ஆனால் கிடைக்கப்பெற்ற பெறுபேறு C,C,S நினைத்தது கிடைக்கவில்லை கணித பாடத்தில் மட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டரீதியில் 20ம் நிலையை தனதாக்கி கொண்டான். இந்நிலை தன் இலட்சியத்துக்கு போதாது என நினைத்து மீண்டும் க.பொ.த உயர்தரப் பரீட்சையினை எதிர் கொள்வதற்காக கற்றல் செயற்பாட்டை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் வெளியாகிய வெட்டுப்புள்ளி அடிப்படையில் யாழ் விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். அதனையும் கருத்தில் கொள்ளாது "கொண்ட லட்சியமே தனது முடிவு" எனக்கருதி மொறட்டுவை முன்னோடிப் பரிட்சையினையும் எழுதி 4ம் நிலையினை எடுத்து கொண்டான். குடும்பத்தினர் ஆனந்தசாகரம் அடைந்தனர். இவ்வாறாக முருகனின் திருவிழாக்காலத்தில் ஓர் நாள் பூசையினை விமர்சையாக கொண்டாடி கோவிதன் உட்பட அனைவரும் வழிபாடு செய்தனர். இதன் பிற்பாடு ஒருகிழமை ஆகவில்லை நன்மையைப் பொறுக்க முடியாத காலம் கோவிதனை வருத்தம் எனும் போர்வைக்குள் சிக்க வைத்த தன்மை ஏதோ!

"வீட்டுக்குச் செல்

ஓடோடி வருவேன்-பிணி

கொண்டதே கோலம்

காண வைத்ததே கைலாயம்" எனச் சூழ்ந்தது

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டி பிறப்பெய்திய கோவிதன் படிப்பிலே வீர மகனாக விளங்கி விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டதிற்காக ஒரு சில கடிதங்கள் வீடு செல்ல கோவிதனோ சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்குச் செல்லலானான். சிகிச்சை பெற்று உடல் ஆரோக்கிய நிலையில் இருந்த கோவி தந்தையின் நெற்செய்கை அறுவடைக்காக தானும் தோழோடு தோழாக சென்று நெல்மணிகளை அள்ளி குதூகலம் அடைந்திருந்தான. அவ்வாறு இருந்த போது உணவில் நாட்டம் குறைந்த தன்மையினால் யாழ் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். வருத்தம் எனும் சொல்லில் உயிரை உண்ணும் விதி எனும் சதி கோவிதனின் ஆருயிரைப் பறித்து விட்டது. இன்றோ! எண்ணாத நிலையில் ஏற்பட்ட கைத்தவறு எமக்கென கோவிதனை இல்லை என்றாச்சு கண்ணீரில் வாழ கவலையில் ஆழ்த்தி கரைந்திட்ட எனதருமைச் செல்வம் குடும்ப விளக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 7ல் ஆசையின் வெளிப்பாடென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமே உமதாகி விட உந்தன் பாதார விந்தங்களில் கண்ணீர்த்துளிகளை அஞ்சலியாக்கு கின்றோம்.

இருபது ஆண்டுகள் பதினொரு மாதங்கள் இருபது நாட்கள் மட்டுமே அமையுமாறு உம் வாழ்நாட்களை விதி வரையுமென யார்தான் கண்டார்கள. விதி துளை போட்டு அழைக்குமென நாம் நினைத்தோமா? கறுக்காய்த்தீவு கல்வெட்டுத்திடல் முருகப் பெருமானின் சிறந்த பக்தி மானக விளங்கிய கோவிதன் என்றென்றும் சான்றோர் மனதில் நிலைத்திருப்பார் என்பது திண்ணம்.

பூ உதிர்வது நியதி யென்றாலும்
புதிது புதிதாய் அது பூக்கிறதே!
புவியில் நின்று உதித்த கோவிதனை
புதிய பிறப்பாய் திருப்பி தரமாட்டாயே?

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழியாது ஒளிரும் கோவிதன் நினைவுகள்

வருடல்களும் நெருடல்களும் மாறி மாறி வந்து போகும் இந்தக் காலப் பெருவெளியில் வந்து மோதியது அந்தத் துயரலை. ஒரு தடவைதான் வருமே என்றாலும் இத்தனை இள வயதிலே வந்திருக்கக் கூடாது அந்த மரணம். 'கோவிதன்' நேரடியாக இவனை நான் கண்டு பழகிட வாய்ப்பு எதுவும் கிடைத்திருக்கவில்லை. ஆனாலும் எமது மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் திரு யோ. அருள்வேந்தன், திரு யோ. ஜெயந்திரன் ஆகியோரின் அன்பிலும், பண்பிலும், செயற்றிறனிலும் இந்த கோவிதனையும் அவனது அறிவையும் ஆற்றலையும் நான் தினமும் கண்டு கொண்டிருக்கின்றேன்.

ஒரு பொறியியளாலனாக அவனை ஆக்கி பார்க்க வென இவர்களும், அவனது பெற்றோரும் கொண்ட ஆர்வமும், முயற்சியும் மதிப்பிட முடியாததாகவே இருந்தது. இந்த முயற்சியில் இடி இறங்கியது போல அந்த மாணவனோடு வந்து ஒட்டிக் கொண்டது கொடிய நோயொன்று. இலங்கையின் முதன்மை மருத்துவமனைகளெல்லாம் ஏறி இறங்கியும், பெருந்தொகை பணத்தினைச் செலவிட்டும், வார்த்தைகளில் வடித்து விட முடியாத துயரத்தினை அனுபவித்தும் அந்த நோயை தீர்த்துவிட அவர்கள் எவ்வளவு பிரயத்தனப்பட்டனர். ஆயினும் இத்தனை விரைவாய் அவனுயிர் பறிக்கப்படுமென எவருமே எதிர்பார்த்திருக்க வில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய இடங்களில் ஒன்றான பூநகரி மண்ணில் பிறந்து வளர்ந்து பெரும் இடர்கள், இடப்பெயர்வுகள் மத்தியிலும் தளராது கல்வி கற்று உயர் கல்விக்காய் காலெடுத்து வைத்து நாடளாவிய ரீதியில் முதன்மை மாணவர்களில் ஒருவனாய் தன்னை அடையாளப்படுத்தி கொண்டிருந்தவேளை இவனின் உயிர் குடித்துப்போனது அந்தக் காலக்கொடூரம். இவன் வளர்ந்து ஒரு பொறியியல் வல்லவனாகி இந்த மாவட்டத்திற்காக ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் கிடக்க கொடிய நோய் ஏனோ அவனை அணைத்துக் கொண்டது.

ஆற்றிவிட முடியாத வேதனை பெற்றோரை, உறவுகளை தேற்றிவிட முடியாத சோதனை. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான அந்த சிற்றிடை வெளியில் அவன் விட்டுச் சென்ற தடங்கள் அழிக்கப்பட முடியாதவையேயானாலும் அவன் இட்டுச் சென்ற புள்ளிகள் பெரும் ஒளிவட்டங்களாகி அவனது குடும்பத்தையும், அவன் சார்ந்த உலகத்தையும் ஆறுதல்படுத்தும் என்ற நம்பிக்கையை நெஞ்சிலேந்தி அவனது ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றேன்.

திருமதி. ரூபவதி கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீரர்க்கான வெற்றி கேடயம் வழங்கும் நிகழ்ச்சி



கணித விஞ்ஞான போட்டியில் முதலிடத்தை பெற்று நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி [தரம் 11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னார்வமும் முயற்சியும் மிக்க குழந்தையின் பிரிவு

கிளிநகரின் பூநகரி பிரதேசத்தில் பிறந்த அமரர் திரு யோகராசா கோவிதன் என்ற குழந்தையின் பிரிவு அக் குடும்பத்திற்கு ஓர் பேரிழப்பாகும். இவன் அப் பிரதேசத்திலேயே ஆரம்ப கல்வி, இடைநிலைக் கல்வியினை நிறைவு செய்து உயர்தரப் பரீட்சைக்கு மீண்டும் ஒரு தடவை தயார் செய்து கொண்டிருந்த போது தான் எம் எல்லோருக்கும் அவன் கொடிய நோய்க்கு ஆளாகியமை தெரிய வந்தது.

வறுமையின் பிணைப்பில் சுழன்ற அக்குடும்பத்தின் மூத்த சகோதரனாகிய திரு யோகராசா அருள்வேந்தன் (மாவட்ட செயலக அலுவலர்) ஊடாகவே இவனிடம் பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. எப்பொழுதும் அமைதியான துடிப்பான முயற்சியுள்ள மாணவனாக திகழ்ந்ததுடன் தானொரு பொறியியலாளனாக வந்து இந்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவனது உந்துதல் மூலம் தெரியவந்தது.

இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கு சென்று வந்தாலும் அவன் ஆசிரியர்களை தேடிச் சென்று கல்வி கற்றமை இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல் அவர்களது குடும்பம் பண்பாட்டிற்கும் முயற்சிக்கும் இலக்கணமாக திகழ்கின்றது. இதற்கமைய குடும்பத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முன்னேற்றகரமான எதிர்காலத்தில் காலடி வைக்க முற்பட்ட பொழுது தான் அமரர் திரு கோவிதன் சுமார் ஒரு வருடமாக நோயின் உபாதைக்கு இலக்காகி கஸ்டங்களை அனுபவித்து அவனது குடும்பம் அவனது உயிரைக்காப்பாற்ற எவ்வளவு அரும்பாடு பட்டது. எனினும் விதி அவனை வென்றுவிட்ட செய்தியே எல்லோர் காதிலும் ஒலித்தது.

ஒரு அழகிய மொட்டு மலர்ந்து பூவாகி காய்த்து கனியாகும் நேரத்தில் அது வாடி வெதும்பி விழுகின்றபோது அதன் பயனை யார் பெற்றுக்கொள்ள முடியும். அதுபோலவே ஒரு பட்டதாரியாக, அறிவாளியாக உருவெடுக்க வேண்டிய இக் குழந்தையை இழந்து அவனது குடும்பம் தவிக்கின்றது. எனினும் இறைவனின் விதி விளையாட்டினை யார்தான் மாற்ற முடியும் எனவே எம்மை நாமே சாந்திப்படுத்திக்கொண்டு அமரர் திரு கோவிதன் அவர்களது ஆத்மா அமைதியாக இறைவன் திருப்பாதங்களை சென்றடைய பிரார்த்திப்பதுடன் இவனை இழந்து தவிக்கின்ற அவனது குடும்பத்தினர் உற்றார் உறவினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.ஜெயராஜா,
கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

யோகராசா கோவிதனின் மறைவு செய்தி கேட்டு ஆழ்ந்த மனவருத்தம் அடைந்துள்ளேன். ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்ற வேண்டிய விருட்சம் விண்ணுலகம் ஏகி விட்டது.

கவினுறு கற்றோர் நிறைவு கறுக்காய்த்தீவின் பொறியியல்
கலங்கரை விளக்கொன்று பிணியினால் பீடிக்கப்பட்டு
பிறவிப் பயன் போது மென்று
விண்ணுலகம் சென்று விட்டது.

மண்ணுலக மாந்தர் மரிப்பது தான் நியதி எனினும் பாதிப்பயணத்தில் பட்டெனச் செல்வதை ஏற்க முடியவில்லை என்னவோ! ஏற்றுத்தான் ஆக வேண்டும். எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் அன்னாரின் துயரினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

K.S VasanthaKumar
Divisionanl secretary/
A,G,A
Poonakary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்து விட்ட இளம் மொட்டு

நிலவளம் அறிவு வளம்
நிறைந்த வயல்வளம் கொண்ட கறுக்காய்த் தீவில் மலர்ந்த ஒரு மொட்டு செல்வன் யோகராசா கோவிதன் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் என்பதில் பெரு மகிழ்வடைவதுடன் அவன் பிரிவை எண்ணி கவலையடைகின்றேன்.

பரம்பரையான கமக்கார குடும்பத்தில் யோகராசா தம்பதியினருக்கு கடைசிப் பிள்ளையாக பிறந்த இவன் பூநகரி மண் வாசனையில் வளர்ந்த ஒரு இளம் மொட்டு இந்த இளம் மொட்டு பூத்து காய்த்து கனி தருமென இலவுகாத்த கிளிபோல் இருந்த இவன் குடும்பத்திற்கு இவனது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகி விட்டது.

என்னைப் பொறுத்த மட்டில் விதி வரைந்த பாதை வழியே வாழ்க்கை ஓடுகின்றது எனக்கூறி இவரது குடும்பத்துக்கு ஆறுதல் கூறி இயற்கை வெற்றிடங்களை விடுவதில்லை என்பதற்கமைய அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ந.சுந்தரமூர்த்தி
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும்
நிர்வாக தொடர்பு செயலாளரும்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

# KN/KILINOCHCHI CENTRAL COLLEGE

A9 வீதி, கிளிநொச்சி A9 Road,Kilinochchi

## இரங்கல் உரை

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கணிதப்பிரிவில் கல்வி பயின்றுகொண்டிருந்த செல்வன் யோகராசா கோபிதன் என்ற மாணவனின் மரணச்செய்திகேட்டு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியது.பாடசாலைக்காலத்தில் பணிவுடனும் பண்புடனும், திறமையாகவும் கல்வி கற்றாய் சமூகத்தில் விருட்சமாக வந்து பயன் தருவாய் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் உன் கல்வியில் வேகம் கண்டு காலனவன் தன்னுடன் அழைத்து விட்டான்.பொறியியலாளனாகக் கனவாகக் கொண்டவனே பாடசாலைச் சமூகம் எதிர்கால பொறியியலாளரை இழந்து சோகத்தில் துயருற்று நிற்கின்றது. உமது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

M.Raveenthiran
Principal
KN/Kilinochchi Central College
Kilinochchi

"கற்று அதன்படி ஒழுகு"

தொலைபேசி - 0212285115,0213208201
e-mail :- kilicentralcollege@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையற்ற வாழ்க்கையில்..................

அன்னை அணைப்பை விட்டு ஆறில் நீ வந்தாய்
எம் பற்றி அணைப்பை நீ பதினாறில் தான் விட்டாய்
கண்டோர் தமை ஈர்க்கும் கண் அழகு கொண்டவனே
கண்ணீரைத் தந்து விட்டுப் போன விதம் சரிதானோ !

குலத்தின் பெருமையை நீ குணத்திலேயே காட்டி வந்தாய்
பணத்தின் பலம் உங்கள் பக்கத்தில் இல்லைதான்
மனத்தின் உறுதியை மலைபோல பெற்றிருந்தீர்
பொறிக்குள் அகப்பட்டு போனவிதம் சரிதானோ!

ஊரின் பெயர் சிறக்க உயர் கல்வி நீ படித்தாய்
பட்டம் பெற முன்னர் பாதியில் நீ சொன்றாயே
ஆசான்கள் மனதில் ஆழப்பதிந்தவன் நீ
ஐயோ என்று
அழவிட்டு போன விதம் சரிதானோ?

ஊர் துடிக்க விட்டாய் உறவுபல துடிக்க விட்டாய்
அன்பாய் அணைக்கும் அக்கா அண்ணாவை
அழவிட்டு சென்றாயே

யாழ் பல்கலைக்கழகம் இரு கரம் கூப்பி வரவேற்க -
விரும்பாது பெறியியலைக் கற்று பொலிவோடு வர விருந்தாய்
இப் பொல்லாத உலகை விட்டு போன விதம் சரிதானோ?

"நீர்க் குமுழி போல நிலையில்லாத இவ் வாழ்க்கை
என் செய்வோம் இறைவா என்றிருப்போம்"

S.Kanapathyppillay
Principal
Kn/ Mulankavil M.V
Kilinochchi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் வேட்கை கொண்ட கணிதமேதையே

புகழ் பூத்த புன்னகை மைந்தா புத்தியிவியாய் வந்துதித்தாய்
கல்வி எனும் மூன்றெழுத்தை கசடற கற்றீரே
ஆரம்ப கல்வியை கல்வெட்டுத்திடல் கந்தசாமி கோயிலுக்கு
அண்மையிலுள்ள கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தில்
சீருடனும் சிறப்புடனும் கற்று சிறந்த சீலராக திகழ்ந்தீரே
பொறியியலாளராய் வர எண்ணி புதுப் புது அனுபவத்தை பெற்றீரே
உம் இலட்சியத்தை அடைய எண்ணி உயிருடன் போட்டி
போட்டீரே

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது பாடுபட்டு அவனியிலே
அடக்கமாய் வாழ்ந்து காட்டினீரே
உன் குடும்பம் உனக்காக பட்ட வேதனை
ஊரறியத் தெரியுமப்பா
உன் உற்ற சகோதரியும் சகோதரனும் உன்னை காப்பதற்கு
உருகி நின்றாரப்பா
பூமியில் பிறந்தவர்கள் இறப்பது நிச்சயம் - ஆனால்
நீயோ இடையினில் ஏங்க விட்டு சென்று விட்டாய்
உன் பிரிவால் ஏங்கி நிற்பது உன் குடும்பம் மட்டுமல்ல
மேதினியில் வாழ்கின்ற எல்லா மக்களுமே.

அதிபர்
கறுக்காய்த்தீவு ம.வி
அவர்களது குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லாமல் சென்றதேனோ.......

யோகராசா குடும்பத்தில் பூத்த புதுமலரே
கோவிதனே யோகம் நிறைந்தவனென
குடும்பமே எண்ணியிருக்க பொறியியல் பாதையில்
தடம் பதிக்க அயராது உழைக்த உன் உடலை
கொடிய நோய் பீடித்ததேனோ!

பெற்றோரும் உடன் பிறப்புக்களும் புலப்பியழ ஊரே சோகத்தில்
உறைந்திருக்க துன்பம் போது மென இறைவன் விடையளிக்க
சொல்லாமல் சென்றதேனோ கோவியனே!

எமது ஆசிரியர் சங்கீதா யோகராசா வின் அன்பு சகோதரன்
அவர்களின் பிரிவால் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் கோவிதனின்
ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்

R.Balachandran
Principal
Kn/ Poonakary M.V

## அறிவுச்சுடர்

கோவிதனின் கல்வி நிலமையினை நன்கு அறிந்த நான் இவர் கல்விக்காக பட்ட துன்பம் என்பதை உணர்ந்து வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் யாழ்/ சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஏனைய அதிகாரிகள் ஒத்துழைப்புடன் தனது கற்றலை குறுகிய காலத்தில் செப்பனே பயின்று யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனாக தெரிவு செய்யப்பட்டும் தன்னிலைக்கு இது போதாது என எண்ணி பொறியியல் செல்லும் வழியை தேடினான். இப்படியான ஒரு அறிவுச் சுடரை இப்புவியில் நாம் அணைய விட்டுள்ளோம். இம் மாணவனின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

S.கேசவன்
(முன்னாள் கதிர்காம வித்தியாலய
அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான புன்னகை

அனைவரையும் கவரும்
அழகுத் தோற்றம்
அதி திறமை
அனைத்தையும் ஒருங்கே பெற்றவன் -கோவி

மத்திய கல்லூரி மாணவர்களின்
மனதைக் கவர்ந்தவனே -கோவி
மனம்முடைந்ததடா உன் பிரிவை அறிந்தும்
மனமிரங்காதவன் கால தேவன்

பல தடைகள் தாண்டி வந்தவன்
பல்கலைக்கழக வாழ்க்கை வாழத் துடித்தவன்- நீயடா
பரீட்சைகளை எல்லாம்
பதற்றமின்றி முகம் கொடுத்தாய் -பலசாலி


குழந்தை உருவாய் விடுதியில் எம்முடன் நின்றாய்
குதூகலமாய் வழ்ந்தான் எம்முடன்
குதூகலித்தது விடுதியே- உன் வருகையிலிருந்து
குமுறுதடா எம் இதயம் - உன் பிரிவிலிருந்து

நம்பமுடியவில்லை 'இறைவனிடம் போய் விட்டாய்'
நம்புகின்றோம் 'இவ்வுலக வாழ்க்கை நிரந்தரமில்லையென'
துடிக்கின்றோம் உன் நண்பர்கள்
உன் கனவு நனவாகப் போகாது எண்ணி
உன் உயிரைக் காப்பாற்ற மறந்த
அந்த இறைவனிடமே
வேண்டுகின்றோம் உன் ஆத்ம சாந்திக்காய்.

கிளிநொச்சி மாவட்ட
பொறியியல்பீட நண்பர்கள்
மொறட்டுவைப் பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சொத்து அண்ணா

பூநகர்க்கு சேர்க்க வேண்டிய கனவுகள்
காலனவன் காசினியில் கூட கனவாக்க விடவில்லை
நீங்கள் செய்த சாதனைகள் எத்தனை எத்தனை
சாதனைகள் என்று சொல்கையிலும்
கணிதத்தின் கர்த்தா நீயென்றும்
கதாநாயகன் நீ என்றும் நீ அறிந்தோமண்ணா
உனது சாதனைக்காக உன் பின்னணி மாணக்களாய்
காத்திருந்தோம்.

எமக்கென ஒரு முன்னோடி இல்லையென்று மூச்சாகி
அலைகின்றோம்
எமையெல்லாம் சிந்திக்க வைக்கவிட்டு – சிறிய வினாடிப்
பொழுதிலே சீக்கிரமாய் எடுத்து சென்றிட்டானே –அண்ணா
உங்கள் ஆறாத ஆசைக் கல்வி அறிவு இனி
யாரிற்கு வரும் அண்ணா
உங்களிற்கு பின் எங்களை தரணியில் – உருவாக்காமல்
எடுப்பதற்கு இறைவன் கூட
விட்டு வைக்க வில்லை

யாரிடம் சொல்லி ஆறுவது உங்கள் ஆறாத துயரத்தை
உங்கள் குடும்பத்தவரிடம் கூட கூற முடியவில்லை
அவர்களுக்கோ நீள் துயரம் எல்லாம் சொல்லி
எங்கு ஆறுவது

அண்ணா மண்ணை விட்டு சென்றாலும்
மடியாது உங்கள் மகிமை
உங்கள் மதியின் துலங்கலின் சிகரத்தை
உலகமே அறியும் முன்
வெகு விரைவில் காலன் – உமை
காத்து நின்று எடுத்திட்டானோ
பூமி சுழன்று சென்றாலும்
உங்கள் புன்னகை அழகு
சுழன்று செல்லாது அண்ணா
என்றும் உங்கள் துயரில்

கிளி/பூநகரி ம.வி
சகோதர சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தஷஷ்டி கவசம்



காப்பு
நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையுங் கைகூடும்
நிமலனருள் கந்தர் ஷஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா
அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமண்டல ஆசிரியப்பா.

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவுச் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கலென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிகை போற்ற
மந்திர வடிவேல்வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரர ரரர
ரிஹண பவச ரிரிரி ரிரிரி
வணபவ வரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாருமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டிலங்க
வரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலபெற்றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
மந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலரா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதனென்று
நுன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றவை வைத்துள் இணை யாகாக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால்பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வையிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பரவசம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் செல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூதர்களெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க அன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
கார்த்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவனன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின மாமலைஉறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரரா குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ் வாழ்கவென் வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ வத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம். 238

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தனை தோளில் சுமந்த கோபி

(இடரின் ஒரு வாரம் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லி மாலை

1. வெண்டாமரைக்கன்றி நின் பதம் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலாவல்லியே!

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித் தருள்வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே!

3. அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ வுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலாவல்லியே!

4. தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே சகலகலாவல்லியே!

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங்கேருகமென்
நெஞ்சத்தடத்தல ராததென்னே நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத்திருந்தாய் சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழு தெளிதெய்தநல் காயெழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே!

7. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ளோதிமப் பேடே சகலகலாவல்லியே!

8. சொல்விற் பனமு மவதானமுங் கவிசொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ் சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப்பேறே சகலகலாவல்லியே!

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே!

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்டமன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலட்சியத்தின்
அயராத
முயற்சியுடன் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OXIDE க்களின் ஆவர்த்தனப் போக்கு

| ஒட்சியேற்ற நிலை | $Na_2O$ | $MgO$ | $Al_2O_3$ | $SiO_2$ | $P_4O_{10}$ | $SO_3$ | $Cl_2O_7$ |
|---|---|---|---|---|---|---|---|
| மின் எதிரியல்பு வித்தியாசம் | 2.6 | 2.3 | 2.0 | 1.7 | 1.4 | 1 | 0.5 |
| பிணைப்பு வகை | ← அயன் பிணைப்பு | | → | ← பங்கீட்டுப் பிணைப்பு | | | → |
| கட்டமைப்பு | ← இராட்சத சாலகம் | | | → | ← சாதாரண மூலக்கூறு | | → |
| பௌதீக நிலை | ← திண்மம் | | | | → | ← வாயு → | ← திரவம் → |
| $\Delta H^{\theta}_{f}$ | −416 | −602 | −1676 | −911 | −2984 | −395 | − |
| நீருடன் தாக்கம் | $NaOH$ வன்காரம் | $Mg(OH)_2$ மென்காரம் | — | — | $H_3PO_4$ மென் அமிலம் | $H_2SO_4$ வன்அமிலம் | $HClO_4$ மிகை வன் அமிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐதரைட்டுக்களின் இயல்புகளின் போக்கு

| சேர்வை | NaH | $MgH_2$ | $AlH_3$ | $SiH_3$ | $PH_3$ | $H_2S$ | HCl |
|---|---|---|---|---|---|---|---|
| மின்னெதிர்த்தன்மை வித்தியாசம் | +1.2 | +0.9 | +0.6 | +0.3 | +0.0 | −0.4 | −0.9 |
| பிணைப்பு வகை | அயன் பிணைப்பு | ← இடைநிலைப் பிணைப்பு → | | ← பங்கீட்டுவலுப் பிணைப்பு → | | | |
| கட்டமைப்பு | [illegible] | [illegible] | [illegible] | ← [illegible] → | | ← [illegible] → | |
| பௌதிக நிலை | ← திண்மம் → | | | ← வாயு → | | | |
| நீருடனான தாக்கம் | NaOH வன்மூலம் | $Mg(OH)_2$ [illegible] | $Al(OH)_3$ [illegible] | ← [illegible] → | | $H_3O^+$ மென்னமிலம் | $H_3O^+$ வன் அமிலம் |

[illegible]

(1) [illegible]
(2) திண்மம் [illegible]
(3) [illegible]
(4) [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லக்குட்டியே................

நான்கு பிள்ளைகளைப் பெற்றோம்
ஒழுக்க சீலர்களாய் மிளிரச் செய்தோம்
நால திக்கிலும் வாழ்திட்ட எம் செல்வங்கள்
படிப்புக்காக 'பட்டபாடோ' எண்ணிலடங்கா

ஒன்றாக வாழ இரண்டு மூன்று மாதங்கள் ஓடியது
சின்னக்குழந்தையவன் சயன்ஸ் கோலில் ரியூசன் எடுத்து
சீக்கிரமாய் வீடு வந்து சேர்ந்தான்
வீட்டிலிருக்க சந்தோசமாயிருக்குதென்றான்

கோயிலிலே கோலாகலமாக விழா எடுத்து
கந்தனை தோழில் தூக்கி
காத்திரமாய் நம்பிக்கை வைத்திருந்த
எம் புதல்வனே கோவி

பரீட்சை வரட்டும் அப்பா அம்மா
நாட்கள் கிட்டுது நல்லாய் செய்வேன் என்று
சந்தோசமாய் வெள்ளைப் பேப்பரில் கணக்கை செய்திடுவான்
சகோதரர்கள் பார்த்து புளகாங்கிதம் அடைந்தனரே!

வந்ததே பிணி கொண்டதே கோலம்
வானத்து முழு நிலவை மறைக்க வந்த இருளை
தடுப்பதற்காக பாடுபட்டோம்
மீட்டெடுப்போம் என்று திடசங்கற்பம் பூண்டோமே

பொல்லாத காலமதில் பொடிப் பொடியாய் சூழ்ந்திருந்து
கற்றலின் வெகுமதியை காட்ட வந்த மைந்தனே
இருபது வயதினிலே இடையூறு விளைவித்ததே
பன்னிரண்டு மாதம்கள் பக்குவமாய் காத்திருந்தோம்
பாச மழைகள் பொழிந்திட்டான் மைந்தனவன் எத்தனை எத்தனை

கட்டியணைத்து கொஞ்சிக்குலவிய வேளைதனில்
காலனவன் பறித் தெடுத்தானே - இனி
எங்கு சென்று தேடுவது! மீண்டும்
வனப் பொலிவுடன் ஓடோடி வருவாய் மகனே
என்ன செய்வோம்! என்ன செய்வோம்! ஏங்கித் தவிக்கின்றோம்.

அப்பா அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமைத்தம்பியே

அண்ணா என்றாலே அடக்கமாய் பேசிடுவாய்
ஈர் மூன்று வருடத்தில் அண்ணாவின் இலாகவில்
இடம் பிடித்திடுவேன் என்று
திடம் கொண்டிருந்த என் அருமைத் தம்பியே

கலைகளில் சிறந்தவனே கணிதத்தில் வித்தகனே
எத்தனை எத்தனை சாதனைகள் புரிந்தாய் தம்பி
எத்தனை எத்தனை ஆகாயக் கோட்டைகளை கட்டினாய்
கற்பனைகள் எல்லாம் மண்ணாகிய தன்மையென்ன!

ஆடியில் தொடங்கிய தம்பியின் துன்பத்தை நீக்க
கிளியிலிருந்து கொழும்பிற்கு சென்று வந்த விதம் சொல்லிலடங்கா
சிகிச்சையின் பயனால் எழுந்திட்டான் தம்பி
ஆனந்தசாகரத்தில் மூழ்கினோமே யாமெல்லாம்
தொடங்கியதோ துன்பம் பட்டதே காலில்
முடிந்ததே ஆடியில்...........

ஆழமாய் எமை எல்லாம்
ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு
அமைதியாய் உறங்க வென்று
அருமைத்தம்பி கோவி
இறைவனிடம் சென்றனையோ!

பெரியண்ணா
வேந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைத் தம்பியே

பால்முகம் மாறாத பாலகனாய்
பார் போற்றும் உத்தமராய்
வசீகர தோற்றத்துடன்
வந்தவதரித்தாயே என் தம்பி

அக்கா அக்கா என்றழைத்து
அண்ணாவாகவும் அறிவுரை வழங்கி
அச்சாணியாக இருந்து மிளிர்ந்திட்ட என்
உடன் பிறப்பு கோவியே

கணிதத்தில் வித்துவனாய்
கண்டோரை மயக்கி விட்டு
சகோதரர்கள் மூவர் சிறக்க
கண்விழித்திட்ட தம்பியே

படிப்பை கண்ணாகக் கொண்டு
பாதி நித்திரையை தியாகம் செய்து
புழுவாய் துடித்திட்ட என் தம்பியே
எங்கயடா சென்று இருக்கின்றாய்

கன்னிச் சிகிச்சை முடிந்தது யாழில்
மயக்கம் தெளியும் வேளையிலே
உறவினர் புடைசூழ - இனி
'படிப்புத்தான்' என்றாய்

வாயால் பொதிந்திட்ட முத்துக்கள் - இன்று
நம் உள்ளத்தை துளைக்கும் அம்பல்லே
உயிரை உண்ணும் விதி எனும் சதியே
பதியால் படைக்கப்பட்ட தம்பியை பாதியில்
ஏன் மறைத்தாய்



அக்கா
சங்கீதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னண்ணா புலம்பல்

எம் வாழ்க்கையை மிளிர வைத்த ஒளிவிளக்கே!
பள்ளிப் பருவம் தொடக்கம்
வீடு திரும்பும் வேளையில்
விவாதம் வந்திடுமே
பாசத்தின் இருப்பிடமாய் ஒன்றித்தோம்
பாதியில் பறித்தானே பரிதவித்து பதறுகின்றோம்

உன் எதிர்கால இலட்சியத்தை எண்ணி
ஒரு வருடம் உன்னை விட்டு பிரிந்திருந்தேன்
இருந்தும் உன் முகம் தெரியாமல்
உருகியழுது மடல் வரைந்தேனடா தம்பி

விஞ்ஞான பீடத்தை எய்தியிருந்தும்
கொண்ட கொள்கையையே இலட்சியமாகக் கொண்டாயே
விண்ணை முட்டும் கட்டிடம் அமைக்க வல்ல
பொறியியலாளராக வருவாய் என எண்ணியிருந்தோம் - இன்று
ஏமாற்றி விட்டானே யமன்

சின்னண்ணா, சின்னண்ணா என்றிடுவாய்
சிரத்தையை தடவடா என்றிடுவாய்
கரத்தால் சைகை காட்டிடுவாய் கண்கதை சொல்ல
முத்துக்கள் சிரித்திடுமே
சிகிச்சை நிலையத்தில் இரவு வேளைதனில்
அப்பா, பெரியண்ணா, சின்னண்ணா என்றிடுவாய் - இன்று
தனியாக தனித்திருந்து துயில்கின்றாயோ!

என் ஆசைத்தம்பி கோவியே - நீ
மேசையில் அடுக்கிய உன் பனுவல்கள் எல்லாம்
முத்து முத்தாய் கண்ணீர் வடிக்குதடா
கண்ணீர்க்கு என்ன கதை சொல்வேன்?

தம்பி என்று சொல்லிட யாருமில்லை
யாகம் செய்தாலும் கிடைப்பதில்லை
நாளும் நான் நிலைகுலைந்து நாடுகின்றேன் கோவியே
காத்திருப்பேன் காலம் சென்றாலும் உன்முகம் காண

ஜெந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் புலம்பல்

கோவிதா
ஒரு கணம்
விழித்துப் பார்
உறவினர் நாம் கூடி
உன் வீட்டில்
உன்னை
நினைக்கின்றோம்
உதடுகள் உரச வில்லை
உன்னை
இழந்ததால்

மறுகணம்
நினைத்துப்பார்
எங்கள்
சுற்றத்தில்
இனிய
குழந்தையை
இழந்து
தவிக்கின்றோம்
வாழமுடியவில்லை
நின்னை
பிரிந்ததால்

இறைவா
மறைவில்
இருந்து பார்
பல்கலை
மாணவனை
பறிகொடுத்து
நிற்கின்றோம் -பிறரை
படிப்பிக்க முடியவில்லை
இவன் தந்த பாடத்தால்

வெளியில்
வந்து பார்
ஒரு தடவை
வெறுத்து
கிடக்கின்றன
இவன்
கரம்பட்ட
கைநூல்
தூக்க
முடியவில்லை
இவன் சென்ற
சோகத்தால்

கோவிதா
மீண்டும்
ஒருதடவை
உன் வயல் நிலங்கள் எல்லாம்
ஏங்கிநிற்கின்றன

உன்
வரவை எதிர்பார்த்து
பனை மரங்கள் எல்லாம்
பதறி நிற்கின்றன
உன்
வரவை எதிர்பார்த்து
பாதம் வராதென்று

இறைவா
யோசித்துப் பார்
எங்கள் குலத்தில்
இரண்டாம் இஞ்சினியரை
எப்படித் தடுத்தாய்
அல்லால்
இதுவும்
உந்தன்
விளையாட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனடா
சிந்தி !

அம்மா அப்பா
அக்கா
அண்ணாவை
நினைத்தாயோ
தம்பி
அல்லால்
நண்பன்
சுற்றத்தை நினைத்தாயோ

தம்பி
ஆயினும்
இறைவா
பிறந்தவர்
அனைவரும்
இறுதியில்
நின் அடியில்
நிம்மதியாய்
அந்த வழியில்
எங்கள் கோவியும்
என்ற திருப்தியில்
உறங்காத விழிகளுடன்
உன்னையே
நம்பி..........................

பெரியப்பா, பெரியம்மா, மாமா,
அத்தை, சித்தப்பா, சித்தி,
உடன்பிறவா சகோதரர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை மன்னவனே

மான்விழி பார்வை கொண்ட மன்னவனே
மாதுளை முத்து பல் வரிசை கொண்டு மழலைச் சிரிப்புடையவனே
மலைபோல் துன்பங்கள் உனை நெருங்கிய போதும் - உன்
மதிகெடாமல் முன்னோக்கி சென்றாய் கல்வியில்
பெற்றவர்களையும் உற்றவர்களையும் வயிறு குலுங்க சிரிக்க வைத்தாய்
பெரியவரை சிரமேற்த்தி நித்தம் நிமிர்ந்து நடந்தாய்
உறுதி தாழா மனம் கொண்டவனே
உதயமாகும் உன்வாழ்வென்று வாழ்த்தினோம்
யோகராசா குடும்பத்திற்கு கிடைத்த யோகம் நீ யென்றோம்
யோதியாக மிளிர்வாய் என எண்ணினோம்
கோவி என்றால் இடரிலும் இன்பத்திலும் முன் உதவுபவனே
கோபுரத்தைத் தாண்டி உன் புகழ் பரவும் என்றிருந்தோம்
கறுக்காய் தீவு மண்ணில் விளைந்த முத்தொன்று
கல்விக் கடலில் நீந்தி பொறியியல் முத்தை எடுப்பாய் என்றிருந்தோம்

எம்மையெல்லாம் ஏமாற்ற நினைத்தானோ எமன்
எங்கிருந்து ஏவினானோ அம்பை
எம் கண்ணனின் கண்ணோ அவன் இலக்கு
வாழத்துடித்திட்ட போதும் வானவன் வாரிவிட்டான்
மூசிய கடலும் வீசிய காற்றும் மிதந்து சென்ற முகிலும்
கணம் அடங்கிப் போனது அன்று
மாலை வந்த செய்தி கேட்டு மலைத்துப் போனோம் ஐயா
உன் வாழ்வை பாதியில் முடித்து விட்டானோ
இரக்கமற்ற இறைவன் இல்லையே - அவன்
இருப்பாய் கோவி எம் இதயங்களில் என்றென்றும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மச்சாள், அண்ணா, அக்கா
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1991
08
24

மறைவு
2012
07
04

## அமரர் யோகராஜா கோவிதன்

(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)

**கறுக்காய்த்தீவு,பூநகரி**

கம்பீர பொலிவுடன் புன்னகை ததும்பும்
சிம்மக்குரலுடன் விறுநடைபோட்டு வஞ்சகமில்லாது
யாவை எல்லாம் நேர்வழியில் கொள்ளை கொண்ட
எங்கள் அன்புள்ளம் கொண்டவனே
இறைவன் பக்கத்துணைதேடி பறந்ததென்ன
இன்முகம் காட்டி நாம் இன்புற பல கதை கூறும் இதயமே
சிரம் தாழ்த்திநிற்கின்றோம் உன் சிந்தனையில்
காலத்தின்கோலமோ? கடவுளின் நாட்டமோ?
காலம் பல உருண்டோடினாலும்
காலாவதியாகாத உன் நினைவுதான் எமக்கு ஆறுதல்.

மாவட்டச் செயலக ஊழியர்கள்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்.
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**UNIVERSITY ADMISSIONS**
**ACADEMIC YEAR 2010/2011**
**DATE OF COMMENCEMENT OF THE COURSE OF STUDY IN PHYSICAL SCIENCE**

**Dear MR KOVITHAN Y.**

**Registration No: 2011/SP/051**

**NIC No.: 912372316V**

We are pleased to inform you that the course of study in **PHYSICAL SCIENCE** for freshers will commence on **10.10.2011**, at 8.30 a.m in the **Faculty of Science, University of Jaffna,Jaffna**

Please be present.

Senior Asst. Registrar/Admissions Branch,
University of Jaffna.
For Registrar (Tel. 021 222 6714)
**19.09.2011**

Normal
RSP046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் கரைகின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 04 |
| 08 | 07 |
| 1991 | 2012 |

## அமரர் யோகராசா கோபிதன்

(எமது சக ஆசிரியை யோ.சங்கீதாவின் அன்புச்சகோதரன்)

கண்ணெதிரே வீற்றிருந்த வாழ்வு - இன்று
கணப்பொழுதில் கரைந்து மறைந்ததுவே!
காலனவனை வென்று வருவாயென்று
காத்திருந்தோம் - இன்று காலமாகிவிட்டாயே!

விண் உயர உன் புகழ் நிலைக்குமென்று – உன்
மண் முழுதும் நம்பி இருந்ததுவே!
கண் எதிரே எல்லாமே காற்றோடு கலந்தாலும்
வான் உள்ளவரை உனை மறவோம் யாம்!

*சாந்தி சாந்தி சாந்தி*

*எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்*

*பாடசாலைச் சமூகம்,*
*கிளி/ பூநகரி. ம. வி.*

# இதய அஞ்சலி

மலர்வு 24 - 08 - 1991



உதிர்வு 04 - 07 - 2012

அமரர்

## திரு.யோகராசா கோவிதன்

பல்கலைக்கழக புதுமுக மாணவன்
கல்லுக்காய்தீவு, பூநகரி - கிளிநொச்சி

முன்நிலாப் பொழுதினில் கடலோரம் வந்தமர்ந்த காற்றே கருணையுண்டோ!
இன்முகம் கொண்ட எம் அன்பின் சகோதரனைப் பறித்திட்ட
காற்றே நீதியுண்டோ!
காலமே எங்களின் புன்னகைத் தோழனின் பாசஉறவை
பாதியில் ஏன்பறித்தாய் – கோவிதனே
உயிர் வலியைத் தந்துவிட்டு ஓய்ந்துறங்கிப் போய்விட்டாய் – துயரில்
வெயிற்புழுவாய்த் துடிக்கின்றோம்.

இவருக்கு எமது இதய அஞ்சலியினை காணிக்கையாக்குவதுடன் இவரது திடீர் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம கணக்காளர், கணக்காளர்,
உத்தியோகத்தர்கள், கணக்குக்கிளை,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
24.08.1991

இறப்பு
04.07.2012



### யோகராசா கோவிதன்

கறுக்காய்த்தீவு பூநகரி

நேற்றுவரை நீலவானின் அந்திச்சூரியனாய்

கருமேகவானின் முழுநிலவாய் ஒளி வீசிய மைந்தனே கோபி,

உன் துறைதனிலே நீ சாதிக்க நினைத்ததுதான் என்னவோ!

பிஞ்சு மரம் காய்க்கும் முன்னே கொப்பிழந்து போனதேனோ!

வெந்த புண்கள் ஆறமுன்னே வேல் பாய்ச்சுவது போல்

பட்ட துயரின் தழும்புகள் மறைய முன்னே காலனவன்
உன்னை கவ்வியதேனோ!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

2010ம் ஆண்டு உயர்தரப் பிரிவு நண்பர்கள்,

கிளி கிளிநொச்சி மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1991 • 08 • 24

மறைவு
2012 • 07 • 04

## அமரர் யோகராஜா கோவிதன்
(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)
கறுக்காய்த்தீவு,பூநகரி

அண்ணா! தம்பி!
நண்பா! உறவே!-என
கூப்பிட்ட குரலுக்கெல்லாம்
ஓடி வந்து தோள் கொடுக்கும்
ஊரின் உறவாய் உயிர்க்கும்
நல் நண்பன் விரைந்து
செல்லக் காலம் வந்து
கொண்டு சென்ற மாயம் என்ன?

ஐயகோ! என்று உறவுகள் கரைந்திட
கண்டவர் வந்தவர்
உள்ளம் எல்லாம் நிறைந்தவனாய்
எல்லோர்க்கும் நல்லவனாய்
எப்போதும் சிரிப்பவனாய்
எம்முன் நின்ற நல் உறவே
இன்றில்லை என்ற செய்திகேட்டு
அதிர்ந்து போன உறவுகளோடும்,
நண்பர்களோடும் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

24  04

08 07

1991 2012

## யோகராசா கோவிதன்


கறுக்காய்தீவு பூநகரி

கிளிநொச்சி

எமது மாவட்டச்செயலகத்தில் கடமையாற்றும் யோகராசா அருள்வேந்தன் அவர்களின் அன்பு சகோதரன் யோகராசா கோவிதன் (யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) அவர்களின் மரணச்செய்தியை கேட்டு சொல்லொணா துயரடைவதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org